# <u>ஆற்காடு நகராட்சி</u>

<u>மன்றக் கூட்டப் பொருள்</u>

## **28.03**.<u>2018-ம் தேதி பிற்பகல் 05.00 மணிக்கு நடைபெற்ற மன்ற சாதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்.</u>

**பொருள்எண். 01:-** இந்நகராட்சி ஆணையாளர்(பொ) மற்றும் பொறியாளர் அவர்களின் பிப்ரவரி –2018 மாத **நாட்குறிப்பு** மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.கு.:–</u>** பதிவு செய்யலாம். (ந.க.1870/16/சி1)

**பொருள் எண்.02 :-** ஆற்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 24–நவீன குப்பை தொட்டி (smart Deep Collection)களில் உள்ள குப்பைகளை கிரேன் இயந்திரத்தின் மூலம் எடுத்து டிப்பர் லாரியை கொண்டு உரக்கிடங்கிற்கு சேர்க்கும் பணி 01.04.2018 முதல் 31.03.2019 வரையிலான காலத்திற்கு 27.02.2018ம் நாளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் காணும் பட்டியலில் உள்ள நிறுவனங்கள் கலந்து கொண்டுள்ளதை ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | M/s. Eco Garb, Chennai | 0.05 மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | V.K.R. Transport, Arcot | 2.03 மதிப்பீட்டை விட அதிகம் |

**அ.கு:–** 1) மன்றப்பொருள் ஒப்புதல் வழங்கலாம்.

2) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள திருவாளர் M/s. Eco Garb, Chennai என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.05 சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று வேலைக்கான உத்திரவு வழங்கிட மன்றம் எதிர் நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் ஒப்புதல் வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.2088/2016/எச்1

**பொருள் எண்.03 :-** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 30 வரையுள்ள வார்டுகளில் தினமும் வீடுதோறும் பெறப்படும் குப்பகைளை பிரித்தெடுக்க முதல் கட்டமாக வார்டு எண்.28 பூபதிநகர், வார்டு எண்.3 அசோக்நகர் மற்றும் வார்டு எண்.8, ஜெயம் நகர் ஆகிய பகுதிகளில் Decentralized Mircro compost centre அமைத்திடும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.174.00 இலட்சத்திற்கான DPR ஐ நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்புவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:–** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கான திட்ட மதிப்பீடு ரூ.174.00 லட்சத்திற்கான நிதியினை அரசு நிதியில் கீழ் ஒதுக்கீடு செய்யக்கோரி DPR –ஐ நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.04 :-** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி வீடுவீடாக சென்று குப்பை சேகரிக்கும் தள்ளு வண்டிகள் பழுதுஅடைந்து குப்பை சேகரிக்கும் பணி பாதிப்பு ஆவதினால் இந்நகராட்சிக்கு சொந்தமான 30 தள்ளு வண்டியில் உள்ள சக்கரம் டயர், டியூப் பக்கவட்டு தகரம் மற்றும் அடி தகரம் ஆகியவை மாற்றுவதற்கு ஒரு வாகனத்திற்கு தோராய செலவினம் ரூ.8000/– வீதம் 30 வாகனத்திற்கு ரூ.2.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி பெற மன்ற பொருள் ஒப்புதலுக்கு.

**அ.கு:–** திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தள்ளு வண்டிகள் தினசரி பயன்படுத்துவது அவசியம் ஆவதினால் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.05 :-** ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் 13 துப்புரவு பணியாளர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து W.P.No.13697/2016 முதல் 13709/2016 வரை 13–ரிட் அப்பீல் செய்ய வழக்கு கட்டணம் தொகை ரூ.130000/– மற்றும் அலுவலக கட்டணம் தொகை ரூ.65000/– மொத்தம் ரூ.195000/–ஐ சென்னை உயர்நீதிமன்றத்தின் அரசு வவக்கறிஞர் திரு.பி. ஆனந்த அவர்களுக்கு வழங்க மன்ற பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:–** 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

2) சென்னை உயர் நீதிமன்றத்தின் அரசு வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்களின் சட்ட கருத்துருக்களின் படி 13 வழக்கிற்கு ரிட் அப்பீல் செய்ய மன்றப்பொருள் எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் முன் அனுமதி வழங்கியமைக்கும் மற்றும் செலவினத்தை வருவாய்நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.2845/2012/எச்1

**பொருள் எண்.06 :-** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மக்கும் குப்பை மக்காத குப்பை என தனிதனியாக பிரித்து உரம் தயாரிக்கும் பணிக்கு (Source Sugerication ) வீடுவீடாக குப்பை சேகரிக்க மக்களுக்கு மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த மக்கும் குப்பை மக்காத குப்பை கொண்ட வாசகம் நோட்டீஸ் 15000 எண்ணிக்கை அச்சடித்து கொள்ளவும் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.1.30 இலட்சத்து முப்பதாயிரத்திற்கு மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:–** 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) இச்செலவினம் பொதுநிதியில் இருந்து செலவுசெய்து SBM தலைப்பின் கீழ் வரப்பெறுகின்ற IEC தலைப்பின் கீழ் பெற்று ஈடுசெய்து கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.07 :-** ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அரசாணை நிலை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.4.1997ன் அளவுகோளின் படி 188 துப்புரவு பணியாளர்கள் நியமனம் செய்ய தகுதியுள்ளது. ஆனால் இந்நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட நிரந்தர துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 121ல் தற்போது 65 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டும் பணிபுரிந்து வருகின்றனர். இவற்றில் 49 தனியார் துப்புரவு பணியாளர்கள் 31.03.2018 வரை ஒப்பந்தப்புள்ளி கால நீடிப்பு செய்யப்பட்டடது மேலும் தற்போது மூன்றாண்டுகளுக்கு 55 தனியார் துப்புரவு பணியாளர்கள் சப்ளை செய்ய வேண்டி ஒப்பந்தப்புள்ளிகள் கூர்ஆய்வு நடவடிக்கையில் உள்ளது. எனவே, நிர்வாக நலன் கருதியும், பொது சுகாதாரம் நலன் கருதியும் 01.4.2018 முதல் 30.04.2018 வரையிலான ஒரு மாத காலத்திற்கு 49 துப்புரவு பணியாளர்கள் அதே ஒப்பந்த விலை விகிதத்தில் பணி செய்ய திருவாளர் கீரின் வாரியர் திருவள்ளூர் நிறுவனம் ஒப்புதல்

அளித்துள்ளமையால் பணி நீடிப்பு செய்து ஆணை வழங்கவும் இதற்கான தோராய செலவினத் தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:–** 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) தற்போது 55 தனியார் துப்புரவு பணியாளர்கள் சப்ளை செய்ய ஒப்பந்தப்புள்ளி கூர்ஆய்வு நடவடிக்கையில் உள்ளதால் இந்நகர பொது மக்களின் பொது சுகாதாரம் பாதிக்காத வகையிலும், நிர்வாக நலன் கருதியும் பழைய ஒப்பந்த விலை விகிதத்தில் மேலும் ஒரு மாத காலத்திற்கு சுகாதார பணி செய்ய திருவாளர் கீரின் வாரியர் நிறுவனத்திற்கு பணி நீடிப்பு செய்து தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்றமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) மேற்படி ஒரு மாத காலத்திற்குண்டான செலவினத் தொகையை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.1185/2014/எச்1

**பொருள் எண்.08 :-** இந்நகராட்சிபொதுசுகாதாரப் பிரிவின் கீழ் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பிளிச்சீங் பவுடன் இருப்பு குறைவாக உள்ளதினால் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி மற்றும் நகரில் மக்கள் கூடும் இடங்களில் சுண்ணாம்புடன் பிளிக்சீங் பவுடன் கலந்து தெளித்து தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைக்கு பிளிச்சிங் பவுடர் தேவைப்படுவதினால் 500k.g (1/2 ) டன் வாங்கி கொள்ளவும் இதற்காகும் தோரா செலவினம் ரூ.20,000/–க்கு மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:–** 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி வாங்க நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.1111/2018/எச்1

**பொருள் எண்.09 :-** தமிழ்நாடு அரசிதழ் நாள்.15.01.2018 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையகரம், சென்னை–5 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7234/2014/ஆர்1 நாள்.15.03.2108 –ன் படி தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்க சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ளது

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 82–ன் படி நியாயமான வருடாந்திர வாடகையின் அடிப்படையில், நகராட்சியால் சொத்துவரியானது விதிக்கப்படுகிறது. மேலும், வரிவிதிப்பு விதி 6–A–ன் படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சொத்துவரியினை நிர்ணயம் செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம்–2018, (2018, தமிழ்நாடு சட்டம் 6)ல் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83 (1) (சி)–க்கு கீழ்க்கண்டவாறு சட்டத் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

**AMENDMENTS TO THE TAMILNADU DISTRICT MUNICIPALITIES ACT 1920**

5. In section 83 of the Tamilnadu District Municipalities Act 1920 In sub-section (1)

(1) for clause (c), the following clause shall be substituted, namely:-

“(c) buildings used for educational purpose Including hostels and libraries, run by the Government of Municipality or any other local authority or Institutions aided by the Government and buildings used for charitable purpose of sheltering the destitute of animals and orphanages, homes and schools for the deaf and dump, asylum for the aged and fallen women and such similar institutions run purely on philanthropic lines as are approved by the council.

Provided that the buildings used for educational purpose by the Government aided Institutions for conducting self-financing courses shall be subject to levy of property tax".
(2) In the proviso, for the Expression "clauses (a) (c) and (e)" the expression "Clauses (a) and (e)" shall be substituted.

மேற்படி சட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் மற்றும் அரசின் உதவி பெற்று செயல்பட்டு வரும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வருமாயின் அக்கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும்.

இது தொடர்பாக ஆற்காடு நகராட்சி சிறப்பு அதிகார / மன்ற தீர்மான எண். நாள்

- ❖ தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 83(1) (சி)—ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி விலக்க்ளிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு சொத்துவரியிலிருந்து விலக்களிக்கவும்.
- ❖ தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1) (சி)—ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்துவரி விதிக்கவும்.
- ❖ தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (1) (சி)—ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும்பாட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்.
- ❖ கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்துவரியாக விதிக்கவும்.
- ❖ தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1) (சி)—ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017—2018 இரண்டாம் அரை ஆண்டிலிருந்து மேற்படி கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்.
- ❖ தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகிள் சட்டம் 1920 பிரிவு 78(3)—ன் படி ஆட்சேபனைகள் அளிப்பதற்காக ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்கும் அனுமதி அளித்துள்ளது.

இதன்படி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 78(3)—ன் படி, மேற்கண்ட முறையில் சொத்துவரி விதிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள விவரம் அறிவிப்பு செய்யப்படுகிறது. இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்கு பின்னர், சொத்துவரி விதிப்பினை மேற்கொள்வது குறித்து இறுதி செய்யப்படும்.

எனவே, மேற்குறிப்பிட்ட சொத்துவரி விதிப்பு குறித்து ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் அதனை குறிப்பிட்ட நாட்களுக்குள் எழுத்து மூலமாக ஆணையாளர், ஆற்காடு நகராட்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

**அ.கு:—1)** கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிப்பு திருத்தம் குறித்த தமிழ்நாடு அரசிதழ் அறிவிப்பு மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை—5 அவர்களின் சுற்றறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

2) நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிப்பு செய்ய ஏதுவாக தினசரி செய்திதாளில் விளம்பரம் செய்ய அனுமதிக்கலாம். மேலும் இதற்கான செலவினம் பொதுநிதியிலிருந்து செலவிடவும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1199/2017/அ1

**பொருள் எண்.10 :-** இந்நகராட்சிபொதுசுகாதாரப் பிரிவின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மக்களியிடையே கழிவறை பயன்படுத்துவதை பற்றிய மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியுள்ளதினால் பொது மக்கள் அறியும் வண்ணம் **4** X **6** அறை கொண்ட Swachh Bharath அங்கீகரிக்கப்பட்ட பேனர் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.**12000/–**மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அ.கு:– 1)** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**2)** அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.1112/2018/எச்1

**ஆற்காடு** | **தனி அலுவலர்,**
**நாள்: 28.03.2018** | **ஆற்காடு நகராட்சி.**